# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2337/17 - 2023 ජූනි මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.06.22

*2337/17 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

*அரசியலமைப்பின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துடன் 154இ ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனங்களின் நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1)(அ) ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் விசாரணை*

மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான், அரசியலமைப்பின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் 154இ ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனங்களின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1அ) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் தவறான நடவடிக்கை மற்றும் 255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க மஹரகம நகரசபை மற்றும் மஹரகம நகரசபையின் தவிசாளராக செயற்பட்டபோது மேற்கூறிய மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சித் தாபனங்களின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் காட்டப்படும் தவறுகள்

இழைக்கப்பட்டுள்ளனவா என்று விசாரணை செய்து அறிக்கை ஒன்றினை முன்வைப்பதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2313/ 41 ஆம் இலக்க மற்றும் 2023, சனவரி மாதம் 04 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு. சந்திரதாச நானாயக்கார அவர்களைக் கொண்ட தனி நபர் விசாரணைச் சபையின் விசாரணைக் காலத்தினை 2023, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை நீடிப்பதாக அறிவிக்கின்றேன்.

**ரொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அன்ட் பார் வீஎஸ்வீ, யூஎஸ்பி,
பீஎச்டி, எப்ஜஎம் (இலங்கை), என்டிசீ, பீஎஸ்சீ,
விமானப் படையின் மார்ஷல்
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண சபை கட்டடத்தில் அமைந்துள்ள,
மேல் மாகாண ஆளுநர் அலுவலகத்தில்,
பத்தரமுல்லை,
2023, யூன் 15.

EOG 06-0167